# படுபாதாளத்தில் இருந்த புவியியல் – சுரங்கத் துறையின் வருவாய் ரூ. 1,835 கோடியாக உயர்ந்திருக்கிறது...!

## சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைக்கு அமைச்சர் துரைமுருகன் பதிலுரை... 5 - ஆம் பக்கத் தொடர்ச்சி

## காலிங்கராயன் - பழவூர் அணைக்கட்டுகள் புனரமைக்கப்படும்!

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டை வடகாடு கிராமம், பழைய பாட்டுவாநாச்சி வடிகாலின் நெடுகை 3.500 கி.மீ-ல் உள்ள புலிகுத்திவாரி மிகைநீர் வழிந்தோடியினை மறு கட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 8 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டப் பகுதியில் செல்லும் பெருங்குடி கால்வாயின் நெடுகை 0 மீட்டர் முதல் 5150 மீட்டர் வரை (விளாச்சேரி நீர்ரொழுங்கி முதல் பெருங்குடி நீர்ரொழுங்கி வரை) புதுப்பிக்கும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சாயல்குடி கிராமம், சங்கரத்தேவன் கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சி, பெரியக்கோட்டை மற்றும் புளியக்குடி கிராமங்கள், கண்ணனார் வடிகாலின் வலது கரையில் நெடுகை 31.00 கி.மீ முதல் 33.00 கி.மீ வரை ஈப்பு பாதையினை சீரமைத்தல் மற்றும் வடிகால் முகப்புகளைப் புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் மற்றும் நகரத்தில் உள்ள கல்லார் மற்றும் சின்ன பாலாற்றை புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், எழுமலை கிராமம், எழுமலை கண்மாயின் உபரி நீர் கால்வாயினைப் புனரமைத்து, பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பழைய ஆழியார் அமைப்பின் கீழ் உள்ள பள்ளிவிளங்கால் வழங்கு வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள மோர்தானா அணையின் இடது புற கால்வாய் தொலைக்கல் 0 மீ முதல் 31840 மீ வரை தூர்வாரி புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மானூர் வரத்து வாய்க்கால், கோரிக்கடவு வரத்து வாய்க்கால் மற்றும் கீரனூர் வரத்து வாய்க்கால்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், ஏனாதிக்கரம்பை, அம்மையாண்டி, செங்கமங்கலம், ஆதனூர் மற்றும் கழனிவாசல் கிராமங்களில் உள்ள, கழனிவாசல் வாய்க்காலில் நெடுகை 0.00 கி.மீ முதல் 11.50 கி.மீ வரை உள்ள கட்டுமானங்களை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் அணையின் பொள்ளாச்சி கால்வாயில் உள்ள அடுக்குத்தொடர் அமைப்பினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், தடப்பள்ளி வாய்க்காலிருந்து மைல் 32-0-570-ல் பிரியும் அம்மாபாளையம் கிளை வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் , சின்னசேலம் வட்டம், கச்சிராபாளையம் கிராமம், கச்சிராபாளையம் கண்மாயின் வரத்து கால்வாயில் நெடுகை 800 மீ முதல் 1570 மீ வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சமமட்டக்கால்வாயில் சர்க்கார்பதி மின் நிலையத்தின் அடிக்கால்வாய் மற்றும் சீராக்கி மதகினை புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிபட்டி கிராமத்தில், அம்மாகுளம், புதுக்குளம், இராயகுளம், ஆகிய குளங்கள் மற்றும் குதிரையாறு அணையின் இடது பிரதான கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் பழைய வாய்க்காலின் நெடுகை 10900 மீ முதல் 11200 மீ வரை மற்றும் நெடுகை 16900 மீ முதல் 17050 மீ வரை உள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் புனரமைப்பு பணி ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி கிராமம், பாப்பன்குளம் வாய்க்காலின் நேரடி பாசன மதகுகள் மறு கட்டுமானம் செய்யும் பணி மற்றும் பெரிய வாய்க்கால் சீர் செய்யும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டப் பகுதியில் செல்லும் நிலையூர் கால்வாயின் நெடுகை 7289 மீட்டர் முதல் 11480 மீட்டர் வரை (மேலக்கால் நீர்ரொழுங்கி முதல் காமாட்சிபுரம் பாலம் வரை) புதுப்பிக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் நகரம், கொளிஞ்சிவாடி பழைய வாய்க்காலின் நெடுகை 6500 மீ முதல் 8000 மீ வரை உள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் புனரமைப்புப் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி, புகளூர் மற்றும் மண்மங்கலம் வட்டங்களில், அமராவதி ஆற்றின் சரகம் 181.440 கி.மீ-ல் தொடங்கும் இடதுகரை வாய்க்காலில், சரகம் 3.044 கி.மீ, 3.710 கி.மீ, 6.600 கி.மீ, 18.900 கி.மீ, 21.900 கி.மீ-ல் அமைந்துள்ள வெளிப்போக்கிகளை புனரமைக்கும் பணி மற்றும் சரகம் 35.900 கி.மீ-ல் புதிதாக வெளிப்போக்கி அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டப் பகுதியில் செல்லும் நிலையூர் கால்வாயின் நெடுகை 1780 மீட்டர் முதல் 7289 மீட்டர் வரை (தென்கரை மடை முதல் மேலக்கால் நீர்ரொழுங்கி வரை) புதுப்பிக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், அமராவதி பிரதான கால்வாயின் சரகம் மைல் 28/7 முதல் 39/2 வரை உள்ள பகிர்மான கால்வாய்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமேனியார் வாய்க்கால் மற்றும் அதன் பிரிவு வாய்க்கால்களைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 12 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், கழியூர் பெரிய ஏரியின் வரத்துக் கால்வாய் தூர்வாரும் பணி மற்றும் செய்யாறு நகரத்தில் உள்ள கொடநகர் ஏரி மற்றும் புளியரம்பாக்கம் ஏரி கால்வாய்களில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், முத்துக்குடி, நெய்குப்பை மற்றும் பூங்காவூர் கிராமங்கள், கோணவாய்க்கால் வடிகாலில் உள்ள குறுக்கு கட்டுமானங்களைப் புனரமைத்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 6 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

8. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், நான்கு மண்டலங்களிலுள்ள 9 மாவட்டங்களில் பழுதடைந்துள்ள 15 ஏரிகள் மற்றும் அதன் கட்டுமானங்கள் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் ரூபாய் 69 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், நரிக்குடி வட்டாரம், திருவிடைநல்லூர் கிராமம், தாமரைக்குளம் கண்மாயின் மடையினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், செம்பரம்பாக்கம் ஏரியினை மறுசீரமைத்து, மேம்படுத்தும் பணி ரூபாய் 22 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், சதுப்பேரி ஏரியினை புனரமைத்து மறுசீரமைக்கும் பணி ரூபாய் 19 கோடி மதிப்பீட்டிலும்

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், அமரசீமேந்திரபுரம் கிராமத்தில் உள்ள பெத்தனோடை ஏரி, வளையன்குளம், புதுக்குளம் மற்றும் கொடிவயல் கிராமத்தில் உள்ள கொடிக்குளம் ஆகியவற்றை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மாதண்டக்குப்பம் கிராமம், மாதண்டக்குப்பம் ஏரியினை மறுசீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மாத்தூர் கிராமத்தில் உள்ள மாத்தூர் பெரிய ஏரி மற்றும் அரசர்குளம் கிராமத்தில் உள்ள இராமன் ஏரி, வெள்ளாகுளம் மற்றும் பெத்தாக்குளம் ஆகியவற்றை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டிலும்

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பெரும்பத்தூர் கிராமம், பெரும்பத்தூர் பெரிய கண்மாயில் இரண்டாவது மடை மறுகட்டுமானம் செய்யும் பணி மற்றும் பெரும்பத்தூர் அணைக்கட்டில் திருகுமதகு அமைக்கும் பணி ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், அ.வெள்ளோடு கிராமம், ஆனைவிழுந்தான் மற்றும் இராமக்கால் ஓடைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள குளத்தின் மதகுகள், அவசரகால கதவினை புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு பணிகள் ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், கள்ளிக்குடி கிராமம், விளத்தூர் கண்மாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 99 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வெண்ணாவல்குடி கிராமத்தில் உள்ள வெண்ணாவல்குடி பெரியக்குளத்தினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், கண்ணாக்குடி கிராமம், கண்ணாக்குடி ஏரியின் கலிங்கினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

9. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், நான்கு மண்டலங்களிலுள்ள 4 மாவட்டங்களில் பழுதடைந்துள்ள 6 நீர்ரொழுங்கிகள் புனரமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறு கட்டுமானம் செய்யும் பணிகள் ரூபாய் 23 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம், கீழக்கூத்தங்குடி கிராமம், காட்டாற்றின் குறுக்கே மைல் 81/30-ல் அமைந்துள்ள புலிவலம் நீர்ரொழுங்கியினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 3 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டம், அமராவதி ஆற்றின் சரகம் 197.200 கி.மீ -ல் பிரியும் வலதுகரை வாய்க்காலின் கடைமடை வெளிபோக்கி மற்றும் சரகம் 16.200 கி.மீ, 20.960 கி.மீ, 22.380 கி.மீ-ல் உள்ள நீர்ரொழுங்கிகள் ஆகியவற்றை மறுகட்டமைப்பு செய்யும் பணி ரூபாய் 3 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், புலவர்நத்தம் மற்றும் பூனாயிருப்பு கிராமங்கள், புலவனார் வாய்க்காலின் குறுக்கே உள்ள புலவனார் மற்றும் பூனாயிருப்பு நீர்ரொழுங்கிகளை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சின்னமுத்தூர் கிராமம், ஆத்துப்பாளையம் நீர்தேக்க அமைப்பில் உள்ள தலை நீர்ரொழுங்கி மற்றும் ஊட்டு கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், மரைக்காகோரையாற்றில் அமைந்துள்ள மேலபெருமலை நீர்ரொழுங்கியின் கீழ் உள்ள பாசனப் பகுதிகளுக்கு கோரையாற்றின் இடதுபுறத்திலிருந்து பிரியும் பள்ளியமேடு வாய்க்கால் வழியாக நீர் ஆதாரம் ஏற்படுத்தும் பணி ரூபாய் 3 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சொக்கன் ஒடையின் குறுக்கே குச்சிப்பாளையம் நீர்ரொழுங்கியினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

10. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், நான்கு மண்டலங்களிலுள்ள 7 மாவட்டங்களில் பழுதடைந்துள்ள தரைப் பாலம், பாதுகாப்பு சுவர், கசிவுநீர் குழாய்களில் அடைப்பு நீக்குதல் மற்றும் இதர கட்டுமானங்கள் புனரமைப்புப் பணிகள் 11 எண்ணிக்கையில், ரூபாய் 42 கோடியே 76 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், தாராப்படவேடு ஏரியின் உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், மஞ்சக்குப்பம் நகர் முதல் குண்டுஉப்பலவாடி கிராமம் வரை பெண்ணையாற்றின் வலது கரையில் வெள்ளப் பாதுகாப்புப் பணி ரூபாய் 9 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வேலூர் மற்றும் ஆத்தமஞ்சேரி கிராமங்களில், காட்டுரங்கால் மடுவில் இடது மற்றும் வலது கரைகளில், நெடுகை 2.50 கி.மீ முதல் 4.90 கி.மீ வரை வெள்ள நீர் உள்வாங்கி அமைக்கும் மற்றும் மறுசீரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் நீராய்வு நிலவறையில் உள்ள கசிவுநீர் குழாய்களில் அடைப்பு நீக்கும் பணி ரூபாய் 1 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மேலிருப்பு ஓடையில் வெள்ளத்தடுப்பு பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், சானாகுப்பம் கிராமம் அருகே, குசா ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தரைப் பாலத்தின் கீழ்ப்புறத்தில் வெள்ளப் பாதுகாப்பு சுவர் மற்றும் கரைகள் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், தாழையாத்தம் அருகில் கௌடண்ய மகாநதி ஆற்றின் குறுக்கே போக்குவழி தரைப்பாலம் (VENTED CAUSEWAY) அமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 41 இலட்சம் மதிப்பீட்டிலும்,

அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், வாங்குடி கிராமத்தில் உள்ள வெண்ணங்குழி ஓடை பாலத்தின் இருபுறமும் பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு மற்றும் மதுரை தெற்கு வட்டம், மதுரை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட மாடக்குளம் வழிந்தோடி முதல் சிந்தாமணி வரை, வெள்ள நீரை திருப்பும் பொருட்டு கிருதுமால் ஆற்றினை மேம்படுத்தும் பணி ரூபாய் 7 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மகிமண்டலம் சித்தேரி ஏரி மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

11. நவீன நில அளவை கருவிகளை (DGPS) கொண்டு எல்லைக் கற்கள் நடும் பணி ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றின் இருகரைகளிலும் DGPS கருவி கொண்டு எல்லைக் கற்கள் நடும் பணி ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

### இயற்கை வளங்கள் துறை

1. புவியியல் மற்றும் சுரங்க ஆணையர் அலுவலத்தில் உள்ள வேதியியல் ஆய்வகம் ரூபாய் 2 கோடி செலவில் மேம்படுத்தி புதுப்பிக்கப்படும்.

சென்னையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் கிண்டியில் உள்ள புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் அலுவலகத்தின் தரை தளம் முழுவதும் மூழ்கியது. இதனால் தரை தளத்தில் அமைந்துள்ள வேதியியல் ஆய்வகமும் மூழ்கியது. ஆய்வகத்தில் பயன்படுத்தப்பட்ட அனைத்து கருவிகளும் வெள்ளத்தில் சேதமடைந்தன.

எனவே, புவியியல் மற்றும் சுரங்க ஆணையர் அலுவலகத்தில் உள்ள வேதியியல் ஆய்வகம் ரூபாய் 2 கோடி செலவில் மேம்படுத்தி புதுப்பிக்கப்படும்.

2. தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் (டாமின்), ரூபாய் 1 கோடி செலவில் புதிய வணிக மேலாண்மை மென்பொருள் உருவாக்கி, குவாரிகளின் செயல்பாட்டினை துல்லியமாக கண்காணிக்கவும், திறனாய்வு செய்யவும், புதிய திட்டங்களை தீட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், சுரங்கம் மற்றும் குவாரிகளின் செயல்பாட்டினை கண்காணிக்க குவாரி மேலாண்மை மென்பொருளை (Q.M.S.) பயன்படுத்தி வருகிறது.

நிகழ்கால தேவைகளை கருத்தில்கொண்டு ரூபாய் 1 கோடி செலவில் புதிய வணிக மேலாண்மை மென்பொருள் (ENTERPRISE RESOURCE PLANNING-ERP) உருவாக்கி, குவாரிகளின், திறனாய்வு செய்யவும், புதிய திட்டங்களை தீட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.

3. தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)மூலம், வேலூர் மாவட்டம், மகிமண்டலம் சுரங்கப் பகுதியில், ரூபாய் 7 இலட்சம் செலவில், 3000 மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

சுரங்கங்கள் மற்றும் குவாரிகளுக்கு அருகில் உள்ள பகுதிகளின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம், வேலூர் மாவட்டம், மகிமண்டலம் சுரங்கப் பகுதியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் 7000 மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து வருகிறது.

இப்பகுதியில் ரூபாய் 7 இலட்சம் செலவில், மேலும் 3000 மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து, சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

4) தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின் மூலம், இராணிப்பேட்டை மாவட்டம், ரெண்டாடி கிராமத்தில் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடமும், ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை குடிநீர் தொட்டியும் அமைத்துத் தரப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் குவாரிகளைச் சுற்றியுள்ள பகுதிகளின் சமுதாய நலன் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்திவருகிறது.

மேலும், இதன் ஒரு பகதியாக இராணிப்பேட்டை மாவட்டம், ரெண்டாடி கிரானைட் குவாரிக்கு அருகிலுள்ள ரெண்டாடி கிராமத்தில் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடமும், ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை குடிநீர்த் தொட்டியும் அமைத்துத் தரப்படும்.

5) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் (டாமின்), ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் செயற்கை நுண்ணறிவு திறனுடன் இயங்கக்கூடிய கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள் (CAMERAS) கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குவாரிகளை கண்காணிக்க, செயற்கை நுண்ணறிவு திறனுடன் இயங்கக்கூடிய கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள் (CAMERAS) ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, குவாரிகளில் நிறுவி, சுரங்கப் பணிகளைக் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் (டான் மேக்), ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொருட்கள் தயாரிப்பு மற்றும் மதிப்பு கூட்டல் பொருட்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்புகள் புத்தகத்தில் PRINT செய்வதற்கு விடுபட்ட அறிவிப்பு மேலும் ஒன்று.

வரதமாநதி உப நதித் திட்டம்

திண்டுக்கல் மாவட்டம், பழநி வட்டம், ஆயக்குடி கிராமத்தில் அமைந்துள்ள வரதமாநதி அணைக்கட்டிலிருந்து உபரி நீரை பாப்பன்குளம், வாய்க்கால் மற்றும் நல்லதங்காள் ஓடை மூலம், ஒட்டன்சத்திரம் வட்டம் மற்றும் தாராபுரம் வட்டம் ஆகியவற்றிலுள்ள முறைசாரா குளங்களுக்கு நீர் வழங்குதல் (குறுக்கீடு) என்று நினைக்கிறோம், அவ்வாறு அல்ல. முதலில் புவியீர்ப்பு, (GRAVITY) மற்றும் நீரேற்றும் முறை, PUMPING மூலம் ரூ.99 கோடி மதிப்பீட்டில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, தற்போது புவியீர்ப்பு (GRAVITY) மூலம் மட்டும் இத்திட்டத்தை செயல்படுத்துவதன்பொருட்டு ரூ.57 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தால், 3,524 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும். (குறுக்கீடு) OK வா?

வீராணம் ஏரியைத் தூர்வார வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் என்னிடம் கேட்டிருந்தார்கள். இதற்கு முன்பும் என்னிடம் கோரிக்கை வைத்திருந்தார்கள். ஆனால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். தற்போது தண்ணீர் நிரப்பப்படுகிறது. தண்ணீர் வடிந்தபிறகு விரைவில் தூர்வாரப்படும்.

மேட்டூரில் மண் எடுப்பது குறித்து உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அது ALLOWED. NO, NO. (குறுக்கீடு) அது தனி, உறுப்பினர், நான் அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும்தான் படித்தேன். நான் படித்தது தலைப்புகள் மட்டுமே. அதன் உள்ளே படியுங்கள். தலைப்புகளின் கீழேயுள்ளவற்றைப் படித்துப் பாருங்கள்.

இவ்வளவு நேரம் இந்த அவையில் இருந்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையின் இத்திட்டங்களில் நீர்வளத் துறையின் அரசு கூடுதல் செயலாளர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., அவர்கள் இந்தத் துறையை சிறப்புற செயல்படுத்துவதற்கும், எனக்கு வழி காட்டுவதற்கும், இந்த அவையில் பதில்களைக் கூறுவதற்கும் எனக்கு ஒத்துழைப்பு தந்தமைக்கு அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று MINES துறையின் முதன்மைச் செயலாளர், மரியாதைக்குரிய பணீந்தர ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் மிகச் சிறந்த ஓர் அதிகாரியான அவர் எதையும் நன்கு சிந்தித்து முடிவெடுத்து, ஆத்திரப்படாமல் என்னை வழிநடத்தக் கூடியவர். அவருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் அவற்றிற்கும் சொல்கிறேன், வரதமாநதி திட்டத்துடன் அதுவும் சேர்த்திருக்கப்பட வேண்டும். அவற்றில். இரண்டு திட்டங்களில் ஒரு திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவைத் தலைவர்: ஆலந்துறையாறு நீங்கள் தொகுதிக்குக் கட்டிக் கொடுத்த ஒன்று.

அமைச்சர் துரைமுருகன்: துறையால் எது இயலுமோ அத்திட்டம் நிறைவேற்றப்படும்.

பேரவைத் தலைவர்: மற்றொன்று ராதாபுரம் கால்வாய்க்கு ஆலந்துரையாறுக்கு உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும் தேவையாக உள்ளது. பழைய ஆற்றில் கடலுக்குள் சென்றது ராதாபுரம் கால்வாய். அமைச்சர் அவர்கள் இவ்விரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றிக்கொடுங்கள். (குறுக்கீடு)

அமைச்சர் துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆக இவ்வளவு நேரம் இந்த அவையில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி, வணக்கம். நீங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் முழுவதுமாக படித்துப் பார்த்தேன். அவற்றிலும், தஞ்சாவூர் உறுப்பினருக்கு என்ன அளிக்கலாம் என்று பார்த்தேன். உறுப்பினரும் தூர்வார கோரிக்கை வைத்துள்ளார்கள். உறுப்பினர் மணி அவர்களும் நீர் ஒழுகிப் பாதை கோரிக்கை வைத்துள்ளார். அனைத்து உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களையும் படித்துப் பார்த்தேன். ஏனென்றால், நானும் எதிர்க்கட்சியில் இருந்தவன். யார், என்னிடம் எந்தக் கோரிக்கையைக் கொடுத்தாலும், அதை முழுவதுமாக படித்துப் பார்ப்பேன். அனைத்தையும் உரிய முறையில் BIND செய்து வைத்திருப்பேன். காரணம் என்னவென்றால், உறுப்பினர்களை பார்க்கும் போது அவர்கள் அளித்த கோரிக்கை என் நினைவிற்கு வரவேண்டும். துறையினால் முடிந்தால் அவை நிறைவேற்றி தரப்படும். நிதிநிலை பிரச்சினை வேறு உள்ளது.

ஆக, உறுப்பினர்கள் அனைவரும் அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டு, நிறைவேற்றுவதற்கு வழி செய்தீர்களானால், நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். துறையினால் அதிக அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

## செங்கோட்டை இலத்தூர் விலக்கு

## சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 23-

தென்காசி மாவட்டம், செங்கோட்டை, இலத்தூர் விலக்கு அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்ததுடன் நிதி உதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு :

தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், இலத்தூர் விலக்கு அருகில் கடந்த 13.06.2024 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் தென்காசியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்தும், கொல்லத்திலிருந்து திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை நோக்கி வந்துகொண்டிருந்த லாரியும் எதிர்பாராதவிதமாக மோதிக் கொண்ட விபத்தில் தனியார் பேருந்தில் பயணம் செய்த தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கொடிக்குறிச்சி கிராமம், சிவராமபேட்டையைச் சேர்ந்த திருமதி.அழகுசுந்தரி (வயது 32) க/பெ.(லேட்) மாரித்துரை மற்றும் அவரது மகன் சிறுவன் அக்ஷயபாலன் (வயது 3) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த திருமதி. அழகுசுந்தரி அவர்களின் கணவர் மாரித்துரை என்பவர் கடந்த 21.09.2021 அன்று காலமாகிவிட்டார் என்றும், இந்த விபத்தில் தற்போது தாய் திருமதி. அழகுசுந்தரியையும் இழந்து அவர்களது மூத்த மகன் சிறுவன் சர்வேஸ்வரன் பெற்றோர் இருவரையும் இழந்து வாடுகிறான் என்பதை அறிந்து பெரிதும் வருந்தினேன்.

இந்த விபத்தில், உயிரிழந்த திருமதி.அழகுசுந்தரி மற்றும் சிறுவன் அக்ஷயபாலன் ஆகியோரின் குடும்பத்தினருக் கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். பெற்றோரை இழந்து தவிக்கும் சிறுவன் சர்வேஸ்வரனின் பெயரில் ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வைப்பீடு செய்யவும் உத்தரவிட்டுள்ளேன். மேலும், தனது தாய்வழிப் பாட்டியின் பாதுகாப்பில் தற்போது இரண்டாம் வகுப்பு படித்து வரும் சிறுவன் சர்வேஸ்வரனின் பராமரிப்பிற்காக சமூக நலத் துறையின் மூலம் மாதாந்திர உதவித்தொகையாக ரூ.4,000 வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இச்சிறுவனது எதிர்கால நலன் கருதி மாவட்ட சமூகநலத் துறையின் மூலம் இச்சிறுவன் முறையாகக் கல்வி பயில்வது உறுதி செய்யப்படும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.